**அ.வ.எண். 167/2023**
**வா.சா.1 : செந்தில்ஸ்ரீநிவாசன்**
**தேதி : 26.11.2025**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

முத்துமாவடிசெட்டியார் மற்றும் அவருடைய மனைவி பாப்பாயிஅம்மாள் ஆகியோருக்கு திருப்பதி செட்டியார், வெங்கட்ராமன் செட்டியார் இரண்டு மகன்கள் என்றால் சரிதான். வெங்கட்ராமன் செட்டியாருக்கு மனைவி வெங்கட்டாயிஅம்மாள், அவர்களுக்கு ஒரே மகன் சுப்பிரமணியம் என்று சொன்னால் சரிதான். திருப்பதி செட்டியார், வெங்கட்ராமன் செட்டியார், பாப்பாயியம்மாள் ஆகியோர் பெயரில் தான் சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். வெங்கட்ராமன் செட்டியார் இறந்தபிறகு அவரது மனைவி பாப்பாயியம்மாள், மகன் சுப்பிரமணியம் செட்டியார், திருப்பதி செட்டியார் ஆகியோர் கடந்த 04.12.1940 ஆம் தேதியன்று பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். பாகக்கறார் பத்திரத்தில் பி செட்யூல் சொத்தை வெங்கட்டாயி அம்மாளுக்கும், சுப்பிரமணியம் செட்டியாருக்கும் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன பி செட்யூல் சொத்தில் ஒரு சொத்துதான் தாவா சொத்து என்று சொன்னால் சரிதான். சுப்பிரமணியம் செட்டியாருக்கு 4 மகன்கள் என்று சொன்னால் சரிதான். 4 மகன்களில் ஒரு மகன் தான் உங்கள் தகப்பனார் தியாகராஜன் என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் மற்றும் மற்ற 3 சகோதரர்களும் சேர்ந்த கடந்த 30.06.1979 ஒரு பாகக்கறார் செய்து கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தில் உங்கள் தகப்பனாருக்கு பி செட்யூல் சொத்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். உங்கள் தாயார் பெயர் தனலட்சுமி என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் என் சகோதர, சகோதரிகள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் 1472 சதுர அடியை பொறுத்து குறிப்பிட்ட நான்கெல்லை பொறுத்து தனித்தனி தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்திருந்தார் என்றால்

சரிதான். தாவா சொத்தை பொறுத்து அது உங்கள் தகப்பனாரின் தனிபட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல பூர்வீக சொத்து ஆகும். மேற்படி 4 செட்டில்மெண்ட் ஆவணங்களையும் எழுதி வைக்க உங்கள் தகப்பானருக்கு பூரண உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 4 செட்டில்மெண்ட் ஆவணங்களிலும் சாட்சி கையொப்பம் செய்திருப்பவர்களும், இன்னார் என்று கையெழுத்து செய்திருப்பவர்களும் ஒரே நபர்கள் என்பதால் செல்லாது என்று நீங்கள் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய தாயார் மற்றும் உங்கள் இரண்டு சகோதரிகளும் அவரவர்களுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்த சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு கடந்த 18.11.2020 ஆம் தேதியன்று ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் 1472 சதுரடியை பொறுத்து இந்த வழக்கு 3ம் பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பானர் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தில் முதல் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தின் ஒரு பகுதியில் உங்கள் தகப்பனாரின் அனுமதியின் பேரில் குடியிருந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் குடியிருக்கும் வீட்டில் 1 மற்றும் 3 ஆம் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் தான் தொடர்ந்து குடியிருந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி உங்களை நீங்கள் குடியிருக்கும் வீட்டிலிருந்து காலி செய்ய அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. நீங்கள் அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு இன்று வரை பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் மொத்தம் 2254 சதுர அடியில் உங்கள் தகப்பனார் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்த 1472 சதுர அடி போக மீதியுள்ள இடத்தை பொறுத்து தான் நீங்கள் பாகப்பிரிவினை தாக்கல் செய்ய முடியும் என்றும் மொத்த சொத்தை பொறுத்து நீங்கள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று

சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள், மற்றும் உங்கள் தாயாருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய நீங்கள் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயார், 2 சகோதரிகள் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக்கொடுத்ததை ரத்து செய்யகோர உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கோரியபடி பாகப்பிரிவினை கோர எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.26 17:22:28 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.